


சக்கர வியூகம்
SAKKRA VIYUGAM
புலனாய்வு நாளிதழ்
"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"




Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

| VOLUME : 01 | ISSUE: 288 | 11.04.2026 | SATURDAY | PANGUNI: 28 | PRICE : RS.5/- |
|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 288 | 11.04.2026 | சனிக்கிழமை | பங்குனி : 28 | விலை : ரூ.5/- |

## காலணிகள், தோல் பொருட்கள் உற்பத்தியில் நாட்டிலேயே

# "தமிழ்நாடு முதலிடம்!"

சென்னை: ஏப்.11-

இந்தியாவில் காலணிகள் மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தியில் தமிழகம் முதலிடத்தில் உள்ளதாக தமிழக அரசு பெருமிதம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு: இந்தியாவின் காலணி மற்றும் தோல் பொருள்கள் உற்பத்தியின் தலைமையிடமாகத் தமிழகம் திகழ்கிறது.




இந்தியாவின் மொத்த தோல் ஏற்றுமதியில் 47 சதவீதமும், காலணி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தியில் 38 சதவீதமும் தமிழகம் மட்டுமே பங்களிப்பது பெருமைக்குரிய சாதனையாகும்.

இந்தத் துறையில் 2 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் பணிபுரிந்து வருகின்றனர். தோல் பொருள்கள் ஏற்றுமதி மூலம் 1.25 பில்லியன் டாலர் மதிப்புள்ள வருவாயை ஈட்டுவதன் மூலம் தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு, குறிப்பிடத்தக்க மிகப்பெரிய பங்களிப்பை அளிக்கிறது.

உலகளாவிய பிராண்டுகள் மற்றும் முதலீட்டாளர்களை ஈர்த்து, குறிப்பாக, பெண்கள் மற்றும் கிராமப்புற மேம்பாட்டுக்கான கொள்கைகளை வகுத்துச் செயல்படுவது, உள்ளடக்கிய மற்றும் நிலைத்தன்மையுள்ள வளர்ச்சியைத் தமிழகம் உறுதிப்படுத்தியுள்ளது என்பதை உணர்த்துகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மெட்ரோ ரயிலில் ஸ்டாலின் பயணம்: திட்டம் கடந்து வந்த பாதையை நினைவுகூர்ந்து நெகிழ்ச்சி

சென்னை: ஏப்.11-

சென்னையின் நேற்று (வெள்ளிக்கிழமை) மெட்ரோ ரயிலில் பயணித்தார் முதல்வர் மு.க.ஸ்டாலின். இது தொடர்பாக அவர் தனது சமூகவலைதளத்தில் பகிர்ந்த பதிவில், "மெட்ரோ விரிவாக்கப் பணிகள் எல்லாம் நிறைவுறும்போது, இந்தியாவிலேயே மெட்ரோ வழியாக அதிக தூரத்தை இணைக்கும் நகரங்களுள் ஒன்றாகச் சென்னை விளங்கும்," என்று பெருமிதம் தெரிவித்தார்.



முதல்வர் தனது சமூக வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது:

மக்களின் அன்பில் நனைந்தபடியும், மெட்ரோ இரயில் திட்டம் உருவாகப் பாடுபட்ட நாட்களின் நினைவுகளைச் சுமந்தபடியும் ஒரு பயணம்ஞ் துணை முதலமைச்சராக இருந்தபோது, ஜப்பான் நாட்டிற்குச் சென்று யிமிசிகிவின் நிதியுதவியைப் பெற்று வந்து, நான் முன்னின்று செய்த திட்டம்!

விம்கோ நகர் முதல் விமான நிலையம் வரையிலும், செண்ட்ரல் முதல் பரங்கிமலை வரையிலும் இயங்கிவரும் முதற்கட்டத் திட்டத்தில் இதுவரையில் கோடிக்கணக்கான பயணங்களை மக்கள் மேற்கொண்டுள்ளனர்.

அதிவேகமாக நடைபெற்றுவரும் மாதவரம் சிறுசேரி, கலங்கரை விளக்கம் பூந்தமல்லி, மாதவரம் சோழிங்கநல்லூர் இடையேயான இரண்டாம்கட்டத் திட்டப் பணிகளையும் விரைவில் மக்களின் பயன்பாட்டுக்கு ஒப்படைப்போம்.

விமான நிலையம் கிளாம்பாக்கம், கோயம்பேடு பட்டாபிராம், பூந்தமல்லி சுங்குவார்சத்திரம், தாம்பரம் கிண்டி, கலங்கரை விளக்கம் உயர் நீதிமன்றம், சிறுசேரி கலைஞர் பன்னாட்டு அரங்கம் என மெட்ரோ விரிவாக்கப் பணிகளெல்லாம் நிறைவுறும்போது, இந்தியாவிலேயே மெட்ரோ வழியாக அதிக தூரத்தை இணைக்கும் நகரங்களுள் ஒன்றாகச் சென்னை விளங்கும்!

சென்னையை வளர்த்தெடுக்கும் நமது கனவு வெல்லட்டும்!" என்று குறிப்பிட்டுள்ளார்.



## சைக்கிள் ஓட்டிய விஜய், வெறும் கையசைப்பு, தவெகவினர் ஏமாற்றம் : காரைக்குடியில் நடந்தது என்ன?

காரைக்குடி: ஏப்.11-

காரைக்குடியில் நேரம் அதிகமானதால் பேசாமல் கையசைத்தபடி தவெக தலைவர் விஜய் சென்றதால், அக்கட்சி தொண்டர்கள் ஏமாற்றமடைந்தனர். மேலும், சிறிது தூரம் தொண்டர்கள் மத்தியில் விஜய் சைக்கிள் ஓட்டினார்.

சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் முத்துராமலிங்க தேவர் சிலை அருகே இன்று காலை 12 மணி முதல் 2.30 மணி வரை தவெக தலைவர் விஜய் பிரச்சாரம் செய்ய தேர்தல் நடத்தும் அலுவலர் அனுமதி கொடுத்திருந்தார். மேலும், காவல் துறை சார்பில் 37 நிபந்தனைகளும் விதிக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், மதுரையிலிருந்து காலை 10.30 மணிக்கு விஜய் வேனில் புறப்பட்டார். அவருக்கு சிவகங்கை மாவட்டத்தில் எஸ்.எஸ்.கோட்டை, திருப்பத்தூர், தம்பிபட்டி, பிள்ளையார்பட்டி, பாதரக்குடி, காரைக்குடி புறவழிச்சாலை, கழனிவாசல், வாட்டர் டேங்க், வருமானவரித் துறை அலுவலகம் உள்ளிட்ட இடங்களில் வழிநெடுகிலும் தொண்டர்கள் உற்சாகமான வரவேற்பு அளித்தனர்.

சிலர் சிலம்பம் சுற்றியும், மண் அள்ளும் இயந்திரம் மூலம் பூக்களை தூவியும் வரவேற்றனர். மேலும், கல்லூரிச் சாலையில் அவர் சிறிது தூரம் தொண்டர்கள் மத்தியில் சைக்கிள் ஓட்டினார். பின்னர் பிரச்சாரம் செய்ய ஒதுக்கிய இடமான முத்துராமலிங்கத் தேவர் சிலை அருகே வந்தபோது, பிற்பகல் 2.30 மணியை கடந்தது.

அவர் முத்துராமலிங்கத் தேவர் சிலையை பார்த்து கும்பிட்டார். தொடர்ந்து அவருக்கு வேட்பாளர் பிரபு கற்பகவிநாயகர் படத்தை கொடுத்தார். மேலும் நேரம் அதிகமானதால் பேசாமல் சிலையை சுற்றி வந்து, தொண்டர்களை பார்த்து கையசைத்தப்படி சென்றார். இதனால் காலை 9 மணியிலிருந்து வெயிலில் பல மணி நேரம் காத்திருந்த தொண்டர்கள் ஏமாற்றமடைந்தனர்.

மேலும், 30க்கும் மேற்பட்டோர் மயக்கமடைந்தனர். அவர்களுக்கு மருத்துவக் குழுவினர் சிகிச்சை அளித்தனர். மின்கம்பங்கள், மரங்களில் ஏற முடியாதபடி தடுப்புகள் அமைத்திருந்தனர். எனினும் சிலர் ஜெனரேட்டர் மீது ஏறி அமர்ந்திருந்தனர்.

இதனிடையே, எஸ்.எஸ்.கோட்டை சோதனைச்சாவடி அருகே விஜய் வாகனத்தை துணை வட்டார வளர்ச்சி அலுவலர் கவிதா தலைமையிலான தேர்தல் நிலையான கண்காணிப்பு குழுவினர் வழிமறித்து சோதனையிட்டனர். வாகனத்தில் எதுவும் பிடிபடாதநிலையில், வாகனம் செல்ல அனுமதித்தனர்.

# நல்லாறு!...

## "மீட்கப்பட வேண்டியது வெறும் ஆறல்ல... ஒரு பண்பாடு!"

## "வாக்குக்காக வருபவர்களே... நதியை மீட்டெடுப்பீர்!"

திருப்பூர், ஏப்.11-

நல்லாறு இதன் பெயரிலேயே இதன் சிறப்பு அடங்கியுள்ளது. 'நலன் தரும் ஆறு' என்பதே மருவி நல்லாறு என்றானது. கொங்கு நாடு "நன்னீர் நாடாக" இருந்தபோது, நொய்யல் மற்றும் நல்லாறு ஆகிய நதிக்கரைகளில் பல நாகரிகங்கள் செழித்து வளர்ந்தன. குறிப்பாக, அவிநாசி லிங்கேஸ்வரர் கோவில் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளின் நிலத்தடி நீர் மட்டத்தைப் பாதுகாப்பதில் நல்லாற்றுக்கு மிகப்பெரிய பங்கு உண்டு.

அன்னூர் பகுதியில் தொடங்கி சுமார் 50 கிலோமீட்டர் தூரம் பயணித்துத் திருப்பூரின் நஞ்சராயன் குளத்தை (பறவைகள் சரணாலயம்) வந்தடைந்து, பின் நொய்யலில் சங்கமிக்கிறது. ஒரு காலத்தில் 150 முதல் 250 அடி வரை பிரம்மாண்டமாக அகன்று ஓடிய இந்த ஆறு, இன்று ஆக்கிரமிப்புகளால் பல இடங்களில் குறுகி ஒரு சாக்கடைக் கால்வாய் போல மாற்றப்பட்டுள்ளது.

ஆன்மீக மற்றும் வரலாற்றுத் தொடர்பு:

அவிநாசி லிங்கேஸ்வரர்: கொங்கு நாட்டின் ஏழு சிவத்தலங்களில் ஒன்றான அவிநாசி அவிநாசிலிங்கேஸ்வரர் கோவில் இந்த நதிக்கரையில்தான் அமைந்துள்ளது.

வரலாற்றின் படி, நல்லாற்றில் வெள்ளம் வரும் காலங்களில் ஆற்றின் தண்ணீர் நேரடியாகக் கருவறைக்குள் புகுந்து இறைவனுக்கு 'அபிஷேகம்' செய்யும் நிகழ்வுகள் நடந்துள்ளன.




திருமுருகன்பூண்டி கோவிலில் மொத்தம் மூன்று முக்கியமான தீர்த்தங்கள் உள்ளன.

வரலாற்று ரீதியாக, இங்குள்ள தீர்த்தக் கிணறுகளில் நீராடி முருகநாதரை வழிபட்டால், கடும் மன உளைச்சல் மற்றும் சித்த பிரம்மை (மனநல பாதிப்புகள்) நீங்கும் என்பது பல நூற்றாண்டுகளாகத் தொடரும் நம்பிக்கை. இன்றும் பல ஊர்களில் இருந்து மக்கள் இதற்காக இங்கு வருகிறார்கள்.

சுக்ரீஸ்வரர் கோவில்: சர்க்கார் பெரியபாளையத்தில் உள்ள 2000 ஆண்டுகள் பழமையான சுக்ரீஸ்வரர் கோவிலைச் சுற்றிலும் இந்த நதியின் நீர் ஓடும் வகையில் அன்று கட்டடக்கலை வடிவமைக்கப்பட்டிருந்தது. இன்று அந்தப் பகுதிகளில் கழிவுநீர் ஓடுவது வரலாற்றுச் சோகம்.

கழிவுநீர் பாதிப்பு: திருப்பூர் மாநகருக்குள் நுழையும் போது நூற்றுக்கணக்கான சாய ஆலைகளின் கழிவுநீரும், குடியிருப்புக் கழிவுகளும் இதில் கலக்கின்றன.

நஞ்சராயன் குளம்: 400 ஏக்கர் பரப்பளவு கொண்ட நஞ்சராயன் குளம் இன்று பறவைகள் சரணாலயமாக அறிவிக்கப்பட்டிருந்தாலும், நல்லாற்றின் வழியே வரும் கழிவுநீரால் அதன் இயற்கைச் சூழல் பாதிக்கப்பட்டு வருகிறது.

அவிநாசி சட்டமன்றத் தொகுதியில் நடைபெற உள்ள பொதுத்தேர்தலில், முன்னெப்போதும் இல்லாத வகையில் ஒரு நதி மீட்பு விவகாரம் விஸ்வரூபம் எடுத்துள்ளது. சிதைந்து கிடக்கும் நல்லாற்றினைத் தூர்வாரி மீட்டெடுக்க, 'நல்லாறு பாதுகாப்பு இயக்கம்' என்ற மக்கள் இயக்கம் தற்போது ஒரு மாபெரும் சக்தியாக உருவெடுத்துள்ளது.

இயக்கத்தின் அதிரடி வியூகம்:

வெறும் அறிக்கைகளோடு நின்றுவிடாமல், அவிநாசி, திருப்பூர் தெற்கு சட்டமன்ற தொகுதிகளில் போட்டியிடும் திமுக, அதிமுக, பாஜக, நாம் தமிழர் மற்றும் தமிழக வெற்றிக் கழக வேட்பாளர்களை நேரடியாகச் சந்தித்து, நதி மீட்புக்கான கோரிக்கை மனுக்களை இந்த இயக்கம் வழங்கி வருகிறது.

மக்களின் ஆதரவு: அவிநாசி மற்றும் சுற்றுவட்டாரக் கிராம மக்களின் உணர்வுகளோடு கலந்த இந்த விவகாரத்தை, நல்லாறு பாதுகாப்பு இயக்கம் மிகச் சிறப்பாகக் கையில் எடுத்துள்ளது. "நல்லாறு தூர்வாரப்படும்" என்பதை வேட்பாளர்கள் தங்களது வாக்குறுதியாக மட்டும் அளிக்காமல், அதை ஒரு செயல்திட்டமாக ஏற்க வேண்டும் என இந்த மக்கள் இயக்கம் வலியுறுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. இது தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஒரு தார்மீக பொறுப்பினையும், அழுத்தத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

## மாம்பழம் சின்னத்தை முடக்கக் கோரிய ராமதாஸின் மனுவை தள்ளுபடி செய்தது ஐகோர்ட்

சென்னை: ஏப்.11-

மாம்பழம் சின்னத்தை முடக்கிக் கோரி பாமக நிறுவனர் ராமதாஸ் தாக்கல் செய்த வழக்கை தள்ளுபடி செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உட்கட்சி பிரச்சினை தொடர்பான உரிமையியல் வழக்கு முடிவுக்கு வரும் வரை மாம்பழம் சின்னத்தை முடக்கி வைக்க மறுத்த உரிமையியல் நீதிமன்ற உத்தரவை எதிர்த்து பாமக நிறுவனர் ராமதாஸ் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு அவசர வழக்காக சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி டி.வி.தமிழ்ச்செல்வி முன் விசாரணைக்கு வந்தது.

அப்போது அன்புமணி மற்றும் வடிவேல் ராவணன் தரப்பில், 'ஏற்கெனவே வேட்பாளர் இறுதிப் பட்டியல் வெளியிடப்பட்டு, சின்னங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில், இந்த வழக்கு செல்லத்தக்கதல்ல; இதை தள்ளுபடி செய்ய வேண்டும்; ஏற்கெனவே ராமதாஸ் தரப்பு வேட்பாளர்களுக்கு சிலிண்டர் சின்னம் ஒதுக்கப்பட்டு அதை அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள், புதுச்சேரியில் தேர்தலும் முடிந்துவிட்டது; அதனால் சின்னத்தை முடக்கும்படி தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட முடியாது.



2025 ஜூலையில் மாம்பழம் சின்னத்தை பாமகவுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பின்னர்தான், அன்புமணியை தலைவராக ஏற்கக்கூடாது என்று ராமதாஸ் தரப்பிலிருந்து தேர்தல் ஆணையத்துக்கு கடிதம் கொடுக்கப்பட்டது. தந்தை எதிராக நான் செயல்படவில்லை; தலைவர் யார் என்பதை உரிமையியல் நீதிமன்றம் தான் முடிவுசெய்ய முடியும்; ராமதாஸ் எந்த பொதுக் குழுவும் நடத்தாமல் தன்னைத் தானே தலைவராக பிரகடனப்படுத்தி உள்ளார். கட்சி மீது அக்கறை இருந்தால் சின்னத்தை முடக்கக் கேட்டு அவர் வழக்கு தொடருவாரா?' என வாதங்கள் முன்வைக்கப்பட்டது.

இந்திய தேர்தல் ஆணையம் தரப்பில், 'விதிகளின்படி ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட கட்சி அங்கீகாரம் இழந்த பிறகு ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட சின்னம் சலுகை அடிப்படையில் ஒதுக்கப்படும். தேர்தல் ஆணைய ஆவணங்கள் அடிப்படையில் பாமகவை அன்புமணி பிரகடனப்படுத்துவதால் சின்னத்தை கட்சிக்கு ஒதுக்கி அவருக்கு கடிதம் அனுப்பப்பட்டது. ஏற்கெனவே தேதிகள் நடைமுறைகள் முடிவடைந்து, வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டு, பிரச்சாரமும் வாக்குப் பதிவு மட்டுமே மீதமுள்ளது' என தெரிவிக்கப்பட்டது.

ராமதாஸ் தரப்பில், 'கட்சியின் நிர்வாகக் குழு கூடி தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். ஏற்கெனவே தேர்தல் ஆணையத்திடம் அளித்த மனு பரிசீலிக்கப்படாததால் தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது' எனத் தெரிவிக்கப்பட்டது.

அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி தமிழ்ச்செல்வி, மாம்பழம் சின்னத்தை முடக்கிவைக்கக் கோரி பாமக நிறுவனர் ராமதாஸ் தாக்கல் செய்த வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.



■ தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் டாக்டர் எம். சாய் குமார், இ.ஆ.ப., சென்னையில் உள்ள லோக் பவனில், தமிழ்நாடு ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேக்கரைச் சந்தித்தார்.



■ அதிமுக வேட்பாளர் கோகுல இந்திராவை ஆதரித்து பிரச்சாரம் செய்த பொதுச் செயலாளர் பழனிசாமி.



■ கூட்டணி கட்சி தொண்டர்களுடன் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்ட திமுக வேட்டாளர் நே.சிற்றரசு.

# மாதவரம் தொகுதி அதிமுக வேட்பாளர் ஊழல் குற்றச்சாட்டால் ஜெயலலிதாவால் தண்டிக்கப்பட்டவர்: உதயநிதி பிரச்சாரம்

சென்னை, ஏப்.11-

மாதவரம் தொகுதியில் ஏற்கெனவே இருமுறை தொடர்ச்சியாக வெற்றி பெற்று எம்எல்ஏவாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள எஸ்.சுதர்சனம் மூன்றாவது முறையாக திமுக சார்பில் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார். இவரை எதிர்த்து அதிமுக சார்பில் முன்னாள் அமைச்சரான வி.மூர்த்தி போட்டியிடுகிறார்.



இந்நிலையில் எஸ்.சுதர்சனத்தை ஆதரித்து துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், மாதவரம் பஜார் பகுதியில் நேற்று பிரச்சாரம் மேற்கொண்டார்.

அப்போது அவர் பேசியதாவது: மாதவரம் தொகுதியில் அதிமுக சார்பில் நிறுத்தப்பட்டுள்ள மூர்த்தி எப்படிப்பட்டவர் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

ஆவின் பாலில் கலப்படம் செய்து ஊழல் செய்தவர். அதனால் அமைச்சர் பதவியில் இருந்தே நீக்கினார் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா. திமுக வேட்பாளர் மாதவரம் சுதர்சனத்தைப் பற்றி உங்கள் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்.

எளிமையானவர். தொகுதி மக்களை அரவணைத்து செல்பவர். கடந்த 10 ஆண்டுகளாக பல்வேறு திட்டங்களை நிறைவேற்றியுள்ளார்.

கடந்தமுறை 57 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் அவரை வெற்றி பெறச் செய்தீர்கள். இம்முறை ஒரு லட்சம் வாக்கு வித்தியாசத்தில் அவரை 3வது முறையாக பேரவைக்கு அனுப்ப வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

# அண்ணாநகர் தொகுதியில் அனல் பறக்கும் பிரச்சாரத்தில் கட்சிகள் போட்டாபோட்டி

சென்னை, ஏப்.11-

சென்னையின் விஐபி தொகுதியான அண்ணாநகரில் இம்முறையும் திமுகவை எதிர்த்து அதிமுக களம் காண்கிறது. திமுக சார்பில் நே.சிற்றரசு வேட்பாளராக முதன்முறையாக களம் காண்கிறார்.

அதிமுக சார்பில் முன்னாள் அமைச்சர் எஸ்.கோகுல் இந்திரா தொடர்ந்து 4வது முறையாக போட்டியிடுகிறார். தவெக சார்பில் பொறியாளரான வி.கே.ராம்குமாரும், நாதக சார்பில் வழக்கறிஞர் எஸ்.சங்கரும் போட்டியிடுகின்றனர்.

மேலும், தமிழ் தெலுங்கு தேச கட்சி சார்பில் ராஜகுமார்



■ நாம் தமிழர் கட்சி வேட்பாளர் எஸ்.சங்கருக்கு வாக்கு சேகரித்த தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான்.

திமுக வேட்பாளர் நே.சிற்றரசு, செல்லும் இடங்களில் எல்லாம் குழந்தைகளுக்கு பெயர் சூட்டி வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார்.

கடந்த ஐந்தாண்டு காலத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள மேம்பாலம் அமைக்க முயற்சிப்பேன்' என்று உறுதி கூறியுள்ளார்.

அதிமுக பெண்களுக்கு அரணாக இருப்பேன்

அதிமுக வேட்பாளரான முன்னாள் அமைச்சர் எஸ். கோகுல இந்திரா, ''உங்களின் சகோதரியாக, தொடர்ந்து உங்களுக்காக அண்ணாநகரிலேயே வசித்து குரல் கொடுத்து வருகிறேன்'' என சென்டிமெண்டாகப் பேசி வாக்கு சேகரிக்கிறார்.

மேலும், ''பெண்களுக்கு அரணாக இருப்பேன். அண்ணாநகர் டவர் பார்க்கை ஹைடெக் பார்க்காக மாற்றுவேன். மத்திய, மாநில அரசுகளின் ஒருங்கிணைப்புடன் அண்ணாநகர் பிரதான சாலைகளில் மேம்பாலங்கள் அமைப்பேன்'' என பிரச்சாரம் செய்து வருகிறார்.

நாம் தமிழர் கட்சி வேட்பாளர் எஸ்.சங்கருக்கு வாக்கு சேகரித்த தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான்.

நாம் தமிழர் கட்சி வேட்பாளர் எஸ்.சங்கருக்கு வாக்கு சேகரித்த தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான்.

நாதக வேலைவாய்ப்பு, கல்வித்தரத்தை உயர்த்துவேன்

நாதக வேட்பாளரான உயர் நீதிமன்ற வழக்கறிஞர் எஸ்.சங்கர், இந்த தொகுதியில் கடந்த முறையும் போட்டியிட்டார். ''நான்வெற்றி பெற்றால் இலவச சட்ட உதவி செய்வேன். வேலைவாய்ப்பு, கல்வித்தரத்தை உயர்த்த முக்கியத்துவம் அளிப்போம்'' என்று பிரச்சாரம் செய்து வருகிறார்.

# மருமகனை எம்.பி.யாக்க முயற்சி; குடும்ப ஆதிக்கத்தை நிலைநிறுத்தும் திமுக பாஜக விமர்சனம்

சென்னை, ஏப்.11-

அப்பா, தங்கை, மகன் வரிசையில் மருமகனை எம்.பி.யாக்கி குடும்ப ஆதிக்கத்தை நிலைநிறுத்த திமுக முயற்சிப்பதாக தமிழக பாஜக செய்தித் தொடர்பாளர் ஏஎன்எஸ். பிரசாத் குற்றம் சாட்டியுள்ளார்.



இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: திமுக ஆட்சியில் ஊழல் மலிந்துவிட்டது. சாதாரண மக்கள் வீடு கட்டினால்கூட கவுன்சிலர்களுக்கு லஞ்சம் கொடுக்க வேண்டிய அவல நிலை உள்ளது. சாதிச் சான்றிதழ் பெறக் கூட லஞ்சம் கேட்கப்படுகிறது.

திமுக தலைவரின் மருமகன் சபரீசன் தற்போது வெளிப்படையாகவே அரசியல் களத்துக்கு வந்துள்ளார். அப்பா முதல்வர், தங்கை எம்.பி., மகன் துணை முதல்வர் என்ற வரிசையில் இப்போது மருமகனையும் எம்.பி.யாக்கி, ஒரு குடும்பத்தின் ஆதிக்கத்தை நிலைநிறுத்தவே திமுக முயற்சிக்கிறது.

குடும்ப அரசியல், ஊழல், சர்வாதிகார ஆட்சியில் இருந்து தமிழகத்தை அனைவரும் மீட்டெடுக்க வேண்டும். தமிழக சட்டப் பேரவைத் தேர்தலில் நான் குமுனைப் போட்டி நிலவினாலும், களத்தில் உண்மையான போட்டி அதிமுக பாஜக கூட்டணிக்கும், திமுக காங்கிரஸ் கூட்டணிக்கும் இடையே தான் என்பது உறுதியாகியுள்ளது.

தவெக அல்லது நாதகவுக்கு அளிக்கப்படும் வாக்குகள், திமுகவை வீழ்த்துவதற்கு உதவாது. மாறாக, அவை செல்லாத ஓட்டுகளாகவே அமைந்து, மறைமுகமாக திமுகவின் வெற்றிக்கு வழிவகுக்கும்.

எனவே, திமுகவை வீழ்த்த வேண்டும் என்று நினைக்கும் வாக்காளர்கள் அனைவரும் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கே வாக்களிக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# வாக்குப்பதிவு அதிகரித்திருப்பது தேர்தல் ஆணையத்துக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றி: பாஜக

சென்னை, ஏப்.11-

நேற்று முன்தினம் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தல்களில் வாக்குகள் அதிக அளவில் பதிவாகி இருப்பது இந்திய தேர்தல் ஆணையத்துக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றி என்றும் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தத்தை வெகு நேர்த்தியாக செயல்படுத்தியதன் காரணமாகவே இந்த சாதனை சாத்தியமானது என்றும் தமிழக பாஜக தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பாஜக மாநில தலைமைச் செய்தித் தொடர்பாளர் நாராயணன் திருப்பதி வெளியிட்டுள்ள அறிக்கையில், “நேற்று நடைபெற்ற சட்டமன்ற தேர்தல்களில் புதுவையில் 91.2%, அசாமில் 85.6%, கேரளாவில் 78.2% வாக்குப்பதிவு நடைபெற்றிருப்பது இந்திய தேர்தல் ஆணையத்திற்கு கிடைத்திருக்கக்கூடிய மிகப்பெரிய வெற்றி. சிறப்பு வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தத்தை (SIR) வெகு நேர்த்தியாக செயல்படுத்தியதன் காரணமாகவே இந்த சாதனை சாத்தியமானது. எதிர்கட்சிகளின் கடும் எதிர்ப்பையும் தாண்டி இந்த வெற்றி கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

பல ஆண்டுகளாக வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்படாத இறந்து போனவர்கள், முகவரி மாறியவர்கள், இரண்டு இடங்களில் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றவர்கள் என பல்வேறு குழப்பங்களால் ஒவ்வொரு தொகுதியிலும், மாநிலங்களிலும் வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகரித்ததோடு , வாக்குப்பதிவு சதவிகிதம் குறைவாக காண்பிக்கப்பட்டு, மக்கள் வாக்களிக்க விரும்பவில்லை என்பது போன்ற ஒரு பிம்பத்தை ஏற்படுத்தியிருந்த நிலையில், தேர்தல் ஆணையத்தின் சிறப்பான செயல்பாடுகள் உண்மை நிலையை உணர்த்தியதோடு, மக்களிடம் ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கையை அதிகரித்துள்ளது.

இந்த சீர்திருத்தத்தை, உண்மையை உணர்ந்து ஏற்றுக் கொள்ளவேண்டிய கடமையும், பொறுப்பும் அனைத்து கட்சியினருக்கும் உள்ளது'' என தெரிவித்துள்ளார்.

# அன்புமணி பிரச்சாரம்: பயணத் திட்டம் அறிவிப்பு

சென்னை, ஏப்.11-

தேசிய ஜனநாயக கூட்டணியில் பாமக அங்கம் வகித்து வரும் நிலையில், கட்சியின் தலைவர் அன்புமணி, கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து இன்று முதல் இரண்டு நாட்களுக்கு தீவிர பிரச்சாரத்தில் ஈடுபடவுள்ளார். அதன்படி இன்று (ஏப்.10) தனது பரப்புரையை, கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் தொகுதிக்குட்பட்ட மணலூர்பேட்டையில் தொடங்கும் அவர், அதைத் தொடர்ந்து பகண்டை கூட்டுசாலை பகுதியில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகிறார்.



பின்னர் திருக்கோவிலூர் மற்றும் விழுப்புரம் நகரப் பகுதிகளில் கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக வாக்குச் சேகரிக்கும் அவர், இறுதியாக பிரச்சாரத்தை விக்கிரவாண்டியில் நிறைவு செய்கிறார். இதையடுத்து நாளை (ஏப்.11) செஞ்சி தொகுதியில் தனது பயணத்தைத் தொடர்கிறார். அங்குள்ள மேல்மலையனூர் மற்றும் செஞ்சி ஆகிய முக்கிய இடங்களில் பரப்புரை மேற்கொண்ட பிறகு, மயிலம் தொகுதிக்கு உட்பட்ட நாட்டார்மங்கலம் பகுதியில் மக்களைச் சந்தித்துப் பேசுகிறார்.

இறுதியாக, விக்கிரவாண்டி தொகுதிக்கு உட்பட்ட அன்னியூர் பகுதியில் நடைபெறும் பிரம்மாண்ட தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றி தனது இரண்டு நாள் பயணத்தை நிறைவு செய்கிறார். அன்புமணியின் வருகையை முன்னிட்டு விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் பாமக மற்றும் கூட்டணி கட்சிகளின் சார்பில் உற்சாகமான வரவேற்புக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.



■ இராமநாதபுரம் நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, தோட்டக்கலை துறை மூலம் 100% வாக்களிப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு கண்காட்சி அரங்கை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு குறித்த துண்டுபிரசுரங்களை வழங்கினார்.

# மாம்பழத்துக்குப் பதிலாக அன்புமணிக்கும் பொது சின்னம் வழங்க ராமதாஸ் தரப்பு கோரிக்கையை ஏற்க நீதிபதி மறுப்பு

சென்னை, ஏப்.11-

மாம்பழத்துக்குப் பதிலாக அன்புமணிக்கும் பொது சின்னம் ஒதுக்க வேண்டும் என ராமதாஸ் தரப்பில் விடுக்கப்பட்ட கோரிக்கையை ஏற்க மறுத்த நீதிபதி, இந்த வழக்கு விசாரணையை இன்றைக்கு தள்ளி வைத்துள்ளார்.



பாமக யாருக்கு சொந்தம் என்பது தொடர்பான உள்கட்சி பிரச்சினை முடிவுக்கு வரும் வரை மாம்பழம் சின்னத்தை முடக்கி வைக்கக்கோரி ராமதாஸ் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு அவசர வழக்காக நீதிபதி டி.வி. தமிழ்செல்வி முன்பாக நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அப்போது, ராமதாஸ் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர்கள் மகாவீர் சிவாஜி, அருள் ஆகியோர், ``அன்புமணியை பாமகவில் இருந்து நீக்கிவிட்டோம். தற்போது அவர் அடிப்படை உறுப்பினர் கூட இல்லை. போலியான ஆவணங்களை தேர்தல் ஆணையத்தில் சமர்ப்பித்து மாம்பழ சின்னத்தைப் பெற்றுள்ளார்.

எனவே, யாருக்கும் மாம்பழ சின்னத்தை ஒதுக்கக்கூடாது. எங்களைப் போலவே அன்புமணிக்கும் பொதுவான வேறு ஒரு சின்னத்தை ஒதுக்கி யாருக்கு செல்வாக்கு உள்ளது என்பதை நிரூபிக்க தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும் என, வாதிட்டனர்.

அப்போது நீதிபதி, தேர்தலுக்கு இன்னும் சில நாட்களே உள்ள நிலையில் வேட்புமனுக்களும் பரிசீலிக்கப்பட்டு கடைசி கட்டத்தில் உள்ளது. இந்த சூழலில் மாம்பழம் சின்னத்தை முடக்கினால் அது பாமகவுக்குத்தானே பாதிப்பை ஏற்படுத்தும், என்றார்.

அதற்கு ராமதாஸ் தரப்பில், ''அன்புமணி தற்போது 18 தொகுதிகளில் தான் போட்டியிடுகிறார். அப்படியென்றால் அந்த 18 தவிர்த்த மற்ற தொகுதிகளில் போட்டியிடும் எங்கள் தரப்புக்கும் மாம்பழம் சின்னத்தை ஒதுக்க வேண்டும், என கோரப்பட்டது.

அதற்கு அன்புமணி தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர்கள் என்.எல்.ராஜா, சித்ரா சம்பத் ஆகியோர், ``தேர்தலில் நடைமுறைகளில் பாதியைத் தாண்டி விட்டோம். வேட்புமனுக்கள் பரிசீலிக்கப்பட்டு சின்னமும் இறுதி செய்யும் தருவாயில் உள்ளது. பேருந்து புறப்பட்டு பலமணி நேரமாகி விட்டது.

இனி அதை விரட்டிப் பிடிக்க முடியாது. அவர்கள் வேண்டுமென்றால் இதுதொடர்பாக தேர்தல் வழக்கு தொடரலாம்'', என்றனர். தேர்தல் ஆணையம் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் நிரஞ்சன் ராஜகோபாலன், ''பாமக தற்போது பதிவு செய்யப்பட்ட கட்சி மட்டுமே.

அங்கீகரிக்கப்பட்ட கட்சி அல்ல. மாம்பழச் சின்னம் தற்போது பொதுப் பட்டியலில் உள்ளது. அதை முடக்க வேண்டும் எனக் கோர முடியாது. இதற்கு முன்பாக பாமக அங்கீகரிக்கப்பட்ட கட்சியாக இருந்ததால் அப்போது ஒதுக்கப்பட்ட மாம்பழச்சின்னம் தற்போதும் முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கப்படுகிறது.

தேர்தல் நடைமுறைகள் ஏற்கனவே தொடங்கி விட்ட நிலையில் சின்னங்கள் ஒதுக்கீடு தொடர்பாக உயர் நீதிமன்றம் தலையிட்டு எந்த உத்தரவும் பிறப்பிக்க முடியாது'', என்றார்.

அதையடுத்து, நீதிபதி இந்த வழக்கு விசாரணையை இன்றைக்கு (10ம் தேதி) தள்ளி வைத்தார். அப்போது குறுக்கிட்ட ராமதாஸ் தரப்பு வழக்கறிஞர்கள், அதுவரை அன்புமணி தரப்புக்கு மாம்பழம் சின்னத்தை ஒதுக்கக்கூடாது என தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும், எனக் கோரினர். ஆனால் நீதிபதி, அந்த கோரிக்கையை ஏற்க முடியாது என மறுப்பு தெரிவித்தார்.



■ மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், தலைமையில், தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல்2026 னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளிலும் உள்ள 4085 வாக்குச்சாவடிகளில் முன்னேற்பாட்டுப் பணிகள் மற்றும் வாக்காளர்களுக்காக ஏற்படுத்தப்படும் வசதிகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் ரிப்பன் கட்டட கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் இணை ஆணையர் (கல்வி) திருமதி க.கற்பகம், துணை ஆணையர் (பணிகள்) சிவ கிருஷ்ணமூர்த்தி, வட்டார துணை ஆணையர்கள் திரு. கட்டா ரவி தேஜா, (வடக்கு வட்டாரம்), எச்.ஆர். கௌஷிக், (மத்தியம் வட்டாரம்), அஃதாப் ரசூல், (தெற்கு வட்டாரம்), மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



■ தென்காசி, காசி விஸ்வநாதர் திருக்கோவில் முன்புறம், நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு 100% வாக்குப்பதிவு நிகழ்ச்சியின் அங்கமாக இணையத்தால் இணைவோம் என்ற நிகழ்வின் மூலம் 1,12,885 வாக்காளர்கள் தேர்தல் உறுதி மொழியினை எடுத்துக் கொண்டதற்காக, எலைட் உலக சாதனைக்கான சான்று மற்றும் கேடயத்தினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப. அவர்களுக்கு எலைட் நிறுவனஆய்வுக்குழுவினர் ரக்சிதா ரங்கசாமி, ஏ.சங்கீதா, டாக்டர். சாந்தாராம் ஆகியோர் வழங்கினார்கள். உடன் தென்காசி மாவட்டத்திற்கென நியமிக்கப்பட்ட பொது பார்வையாளர்கள் நீரஜ்குமார், (கடையநல்லூர், தென்காசி) ஈஷா பிரியா, (ஆலங்குளம்) ஆகியோர் உள்ளனர்.



## ”தேசிய திறனாய்வுத் தேர்வில் (NMMS) திருச்சிற்றம்பலம் பள்ளி மாணவிகள் ஹாட்ரிக் சாதனை!

தென்காசி, ஏப்.11-
தென்காசி மாவட்டம், திருச்சிற்றம்பலம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி மாணவிகள் தேசிய திறனாய்வுத் தேர்வில் (NMMS) சிறப்பிடம் பெற்று பள்ளிக்குப் பெருமை சேர்த்துள்ளனர். இப்பள்ளியில் எட்டாம் வகுப்பு பயிலும் 6 மாணவிகள், ஆசிரியர்களின் தீவிர வழிகாட்டு தலின்படி NMMS தேர்வினை எழுதினர். இதற்காகச் சிறப்பு வகுப்புகள் மற்றும் மாதிரி தேர்வுகள் மூலம் அவர்கள் தயார் செய்யப்பட்டனர்.

இதில் மாணவிகள் கனிஷ்கா, அனு ராகினி, வாசுகி ஆகிய மூவர் தேர்ச்சி பெற்றுச் சாதனை படைத் துள்ளனர். இவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000 வீதம் நான்கு ஆண்டுகளுக்கு மொத்தம் ரூ.48,000 கல்வி உதவித் தொகையாகக் கிடைக்கும். வெற்றி பெற்ற மாணவி களுக்குப் பள்ளியின் சார்பில் நினைவுப் பரிசுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்ச்சியில் பள்ளி யின் தலைமை ஆசிரியை சராபின், ஆசிரியர் க. ராஜ்குமார், ஆசிரியைகள் ஹெலினா, லாவண்யா, கவிதா, பள்ளி மேலா ண்மை குழுத் தலைவர் மற்றும் பெற்றோர்கள் திரளாகக் கலந்துகொண்டு மாணவி களை வாழ்த்தினர்.



## “இரட்டை இலைக்குத் துணை நிற்கும் சேனைத்தலைவர் சமுதாய இளைஞர் படை!”

தென்காசி ஏப்.11-
தென்காசி மாவட்டம் கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதி அதிமுக வேட்பாளர் செ. கிருஷ்ண முரளி (எ) குட்டியப்பா அவர்களுக்கு ஆதரவாகச் சேனைத்தலைவர் சமுதாயத்தின் 64 கிராம இளைஞர் அணியினர் இன்று திரண்டு வந்து தங்களது ஆதரவை உறுதிப்படுத்தினர்.

செங்கோட்டையில் உள்ள மாவட்ட அதிமுக அலுவலகத்தில், 64 கிராமங்களைச் சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் 200க்கும் மேற்பட்ட இளைஞர்கள் வேட்பாளரை நேரில் சந்தித்து மலர்மாலை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர். தமிழ் கடவுள் முருகப் பெருமானின் போர்ப்படைத் தளபதி வீரபாகு சேனைத்தலைவரின் திருவுருவப் படத்தைப் பரிசாக வழங்கிய இளைஞர்கள், வரும் தேர்தலில் இரட்டை இலை சின்னத்தில் குட்டியப்பா அவர்களைப் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்வோம் என உறுதியளித்தனர். செங்கோட்டை மேலூர், கீழூர், கடையநல்லூர் முத்துகிருஷ்ணாபுரம், மேலகடையநல்லூர், சிவராமபேட்டை, இலத்தூர், இடைகால் உள்ளிட்ட 64 கிராமங்களைச் சேர்ந்த சமுதாய நிர்வாகிகள் இந்த எழுச்சிமிகு நிகழ்வில் பங்கேற்றனர்.

இந்நிகழ்வில் அதிமுக மாவட்ட நிர்வாகிகள் குரு பிரசாந்த், சக்திவேல், நகர செயலாளர் கணேசன், ஆய்க்குடி முத்துக்குட்டி மற்றும் வழக்கறிஞர் நாகராஜன் உள்ளிட்ட அதிமுக மற்றும் சமுதாய முன்னணி நிர்வாகிகள் பலர் முன்னிலை வகித்தனர்.



■ இந்திய தேர்தல் ஆணையத்தால் புதுச்சேரி மாநிலத்திற்கு சட்டமன்றத் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டு நேற்று வியாழக்கிழமை புதுவையில் அமைந்துள்ள 23 சட்டமன்ற தொகுதிகளிலும் காலை 7.00 மணி முதல் மாலை 6:00 மணி வரை அமைக்கப்பட்டுள்ள வாக்குப்பதிவு மையங்களில் தேர்தல் நடைபெற்று இனிதே நிறைவுற்ற நிலையில் நேற்று மாலை 6.00 மணிக்கு மேல் அனைத்து வாக்குப்பதிவு இயந்திரங்களும் வாக்குப்பதிவு மையங்களில் இருந்து தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் லாஸ்பேட்டையில் அமைந்துள்ள வாக்கு என்னும் மையங்களான தாகூர் கலை கல்லூரி. மோஜிலால் நேரு பாலிடெக்னிக் கல்லூரி மற்றும் மகளிர் பொறியியல் கல்லூரி ஆகிய மூன்று வாக்கு என்னும் மையங்களில் அனைத்து இயந்திரங்களும் பாதுகாப்பாக வைக்கப்பட்டு சீல் வைக்கப்பட்டன. 24 மணி நேரமும் பாதுகாப்பை பலப்படுத்தும்படி அறிவுறுத்தினார்கள். உடன் முதுநிலை காவல் கண்காணிப்பாளர் கலைவாணன் இ கா ப கூடுதல் மாவட்ட ஆட்சியர் சுதாகர் மற்றும் தேர்தல் நடத்தும் அதிகாரிகள் உடன் இருந்தனர்

# “களத்தில் தவெக, நாதக இருந்தாலும் இருமுனை போட்டிதான்” -அண்ணாமலை கருத்து

ஊட்டி, ஏப்.11-
“தமிழக வெற்றி கழகம் மற்றும் சீமான் களத்தில் இருந்தாலும், தேர்தல் என்று வந்துவிட்டால் அது இருமுனைப் போட்டியாகத்தான் இருக்கும். ஒன்று ஆளும் திமுக, மற்றொன்று அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி” என பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

நீலகிரி மாவட்டம், ஊட்டி சட்டப்பேரவைத் தொகுதி பாஜக வேட்பாளர் மு.போஜராஜனை ஆதரித்து பிரச்சாரம் செய்ய பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை இன்று காலை கோவையில் இருந்து ஹெலிகாப்டர் மூலம் ஊட்டி வந்தார். ஊட்டி தீட்டுக்கல் ஹெலிகாப்டர் தளத்தில் வந்து இறங்கினார். அங்கு பறக்கும் படையினர், ஹெலிகாப்டரை சோதித்தனர்.

அப்போது, செய்தியாளர்களிடம் அண்ணாமலை கூறியது: “ஊட்டி சட்டப்பேரவைத் தொகுதியில் இந்த முறை தேசிய ஜனநாயக கூட்டணியின் சார்பாக, பாரதிய ஜனதா கட்சியின் வேட்பாளராக போஜராஜன் களத்தில் நின்று கொண்டிருக்கிறார். கடந்த



முறை சில ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில்தான் வெற்றி வாய்ப்பை இழந்தோம்.

அதன் பிறகு ஐந்து ஆண்டு காலம் மிக கடுமையாக உழைத்திருக்கிறோம். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர்கள், தொண்டர்கள் எல்லாம் முழு ஒத்துழைப்பை நல்கி, இந்த முறை நிச்சயமாக ஊட்டியில் போஜராஜனுக்கு வெற்றி வாய்ப்பு கிடைக்கும் என்று முழுமையாக நம்புகிறோம்.

மக்கள் தன்னெழுச்சியாக காங்கிரஸ் கட்சிக்கு இரண்டு முறை இங்கு வாய்ப்பு கொடுத்தனர், ஆனால், எந்தவிதமான அடிப்படை வேலையும் செய்யவில்லை. மறுபடியும் திரும்பத் திரும்ப அதே கட்சி வந்து எந்த வேலையும் செய்யாமல், இன்னைக்கு திராவிட முன்னேற்றக் கழக கூட்டணியில் கூட ஒரு பிளவோடு இருக்கிறது.

எனவே, இந்த முறை வெற்றி வாய்ப்பு எங்களுக்குத் தான். ஏன் என்றால் மக்களுடைய அன்பு எங்கள் பக்கம் தான் இருக்கிறது. போஜ ராஜன் மிகச் சிறந்த ஒரு சட்டப்பேரவை உறுப்பினராக பணியாற்றுவார் என்ற நம்பிக்கை இருக்கிறது. மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் ஊட்டிக்கு வருகிறார். எங்களுடைய மூத்த தலைவர்களும் ஊட்டிக்கு வருகின்றனர்.

புதுச்சேரியில் 89% வாக்குப்பதிவு நடந்துள்ளது. அசாமிலும் மிக அதிகப்படியான வாக்குப் பதிவு. காரணம் எஸ்ஐஆர் மூலமாக வாக்குகள் நீக்கப்பட் டிருப்பது இயற்கையாகவே வாக்கு சதவீதத்தை அதிகப்படு த்தியிருக்கிறது. புதுச்சேரியிலும், அசாமிலும் ‘ப்ரோ இன்கும்பன்சி’ அதாவது ஆளுகின்ற அரசு நமக்கு மீண்டும் வேண்டும். அசாமில் என்டிஏ பாரதிய ஜனதா கட்சி அரசு மீண்டும் வேண்டும். புதுச்சேரியில் என்.ஆர். காங்கிரஸ் தலைமையிலான என்டிஏ ஆட்சி மீண்டும் வேண்டும் என்பதில் மக்கள் உறுதியாக இருக்கிறார்.

இது தமிழகத்திலும் எதிரொலிக்கும். மே 4ஆம் தேதிக்கு பிறகு எடப்பாடி பழனிசாமி முதல்வராக பொறுப்பேற்கும் போது தமிழகம் முழுவதும் ஒரு எழுச்சியான சூழல் உருவாகும்.

தமிழக வெற்றி கழகம் மற்றும் சீமான் களத்தில் இருந்தாலும், தேர்தல் என்று வந்துவிட்டால் அது இருமுனைப் போட்டியாகத்தான் இருக்கும். ஒன்று ஆளும் திமுக, மற்றொன்று அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி.

எடப்பாடி பழனிசாமி கருத்தை முதல்வர் ஸ்டாலின் தவறான ஒரு சூழலில் பேசுகிறார். கனிமொழி எங்களை யாராவது எதிர்த்துப் பேசினால் ‘மலர் வளையம்’ வைப்போம் என்று கூறுகிறார், இது மிரட்டல் இல்லையா?

மேலும், நட்சத்திரப் பேச்சாளராக இருக்கும் அவர் இதுவரை திமுகவின் ஒரு கூட்டத்தில் கூட பங்கேற்கவில்லை. அந்த ஆடியோவில் அவர் முதல்வரின் திறன் பற்றியும், 2ஜி வழக்கு பற்றியும் பேசியுள்ளது தமிழக மக்கள் அனைவருக்கும் தெரியும். இது எங்களுடைய பிரச்சாரத்துக்கு இன்னும் வலுசேர்த்துள்ளது” என்று அவர் கூறினார்.

## தமிழ்நாடு நில அளவைத்துறை அலுவலர்கள் சங்கம் மாநில ஒருங்கிணைப்பாளர், மாநிலத் தலைவர் வெ. மகேந்திரகுமார் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பு



ஆங்கிலேயர்கள் காலத்தில் நவீன கருவிகள் கொண்டு முக்கோணவியல் அடிப்படையில் முக்கோண புள்ளிகளை உருவாக்கி தன்னிகரில்லா உழைப்பை தந்த நில அளவை பொறி யாளர்கள் தமிழ்நாடு சென்னை செயின்ட் தாமஸ் மவுண்ட் மலை உச்சியில் இருந்து நில அளவையின் பிதாமகன் ஆகிய பெருமதிப்பிற்குரிய வில்லியம் லாம்டன் தலைமையில் நில அளவைப் பணியை தொடங்கி இந்தியாவின் மிக உயர் சிகரமான எவரெஸ்ட் சிகரத்தில் முடித்த பெருமை நில அளவை களப்பணியாளர்களுக்கு / பொறியாளர்களுக்கு உண்டு. இந்த வளர்ச்சியை எட்டுவதற்கு பாடுபட்ட அனைவருக்கும் தேசிய நில அளவை தினத்தில் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதுடன் இன்று நில அளவை துறையில் பணியாற்றும் இயக்குனர் முதல் கடை நிலை பணியாளர் வரை அனைவருக்கும் நெஞ்சார்ந்த நில அளவை தின வாழ்த்துக்களை க் கொள்கிறேன் என தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம், தமிழ்நாடு நில அளவைத்துறை அலுவலர்கள் சங்கம் மாநில ஒருங்கிணைப்பாளர், மாநிலத் தலைவர் வெ. மகேந்திரகுமார் தெரிவித்தார்.




■ வருகிற சட்டசபை தேர்தலையொட்டி 100% சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுவருகிறது. மதுரை கலெக்டர் அலுவலக வளாகத்தின், முன்பாக தோட்டக்கலை துறை சார்பில் பூக்கள் மூலம் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

## பொது அறிவிப்பு

மதுரை, சின்னக்கடை வீதி, எழுத்தாணிக்காரத் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீ வீரட்டீஸ்வரர் பெரியநயினார் திருக்கோவிலின் விஸ்வகர்மா சமூகத்தைச் சேர்ந்த மாதக்க வகுப்பார், மல்ல நயினார் கோவிலார் மற்றும் நீண்டகரையார் வகுப்பினருக்கிடையே ஏற்பட்ட நிர்வாகப் பிரச்னை காரணமாக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் WP(MD) No.23407 of 2015 தாக்கல் செய்த வழக்கில் 01.12.2023 அன்று மேற்படி 3 வகுப்பினருக்கும் தேர்தல் நடத்த உத்தரவிடப்பட்டது. அதனை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுவும் WA(MD) No.840 of 2024) 05.06.2024 அன்று தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில், மேற்படி தரப்பினரிடையே பல்வேறு முறை ஆலோசனைக் கூட்டம் நடத்தி போதிய வாய்ப்பளித்தும், மாதக்க வகுப்பினர் மட்டும் வாக்காளர் பட்டியல் தயாரிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்க மறுத்து வருகிறார்கள்.

இந்நிலையில் கடந்த 04.04.2026 அன்று இறுதி வாய்ப்பு வழங்கும் வண்ணம் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டு மேற்படி மாதக்க வகுப்பினரினை வேட்பாளர் பட்டியல் தயார் செய்ய அவர்கள் தரப்பு வாக்காளர் விபரங்களை தர கோரப்பட்டது. இருப்பினும் இதுவரை மேற்படி தரப்பினர் ஒத்துழைக்க மறுத்து வரும் நிலையில் கடந்த 26.09.2025 அன்று உயர்நீதிமன்ற மதுரை கிளை எவ்வித காலதாமதமின்றி வழக்கறிஞர் ஆணையர்கள் முடிவெடுத்து தேர்தலை நடத்தி முடிக்க வேண்டுமென உத்தரவிட்டுள்ளதால், மேற்படி மாதக்க வகுப்பினர் உடனடியாக தத்தமது வாக்காளர் விபரங்களை அளித்து தேர்தலை விரைவில் நடத்த உரிய ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம், ஒரு வேளை மாதக்க வகுப்பினரிடமிருந்து வாக்காளர் விபரங்கள் கிடைக்கப்பெறவில்லையெனில் 15.04.2026 அன்று இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

இப்படிக்கு,
**A.ராபின்சன் & RM.அருண் சுவாமிநாதன்,**
வழக்கறிஞர் ஆணையர்கள்.
சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை



■ மதுரை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார், வாடிப்பட்டி தாய் பள்ளியில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 நடைபெற உள்ளதை முன்னிட்டு முந்தைய பயிற்சி வகுப்பில் பங்கேற்காத வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்காக நடைபெறும் தேர்தல் பணிகள் குறித்த பயிற்சி வகுப்பு நடைபெறுவதை பார்வையிட்டார்.



## ரோட்டரி ஆளுநர் தினேஷ் பாபு முன்னிலையில் கல்வி மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் ரோட்டரி வியூகம்!

திசையன்விளை, ஏப்.11-
நெல்லை மாவட்டம் திசையன்விளை ரோட்டரி கிளப் சார்பில், ரோட்டரி ஆளுநர் வருகை தின விழா குருநாதன் மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

திசையன்விளை ரோட்டரி கிளப் தலைவர் வழக்கறிஞர் பொன்துரை தலைமை தாங்கி அனைவரையும் வரவேற்றார்.

ரோட்டரி மாவட்ட 3212 ஆளுநர் தினேஷ் பாபு மற்றும் துணை ஆளுநர் செல்லப்பா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

நலத்திட்ட உதவிகள்: 2 ஏழைப் பெண்களுக்குத் தையல் இயந்திரங்கள் மற்றும் சேலைகள், கல்லூரி மாணவிகளுக்கு விளையாட்டுச் சாதனங்கள், ஏழை மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு உதவித்தொகை உதவிகள் வழங்கப்பட்டன.

கடந்த ஓராண்டில் செய்யப்பட்ட சேவைப் பணிகளை விளக்கி ரோட்டரி கிளப் செயலாளர் வேல்முருகன் ஆண்டறிக்கையை வாசித்தார்.

முன்னாள் தலைவர்கள் முருகேசன், பால்ராஜ், செல்வகுமார், பொருளாளர் லவ் சன் மற்றும் நிர்வாகிகள் சதாசிவன், விஜய பெருமாள், முத்துலிங்கம் உள்ளிட்ட உறுப்பினர்கள் பலர் திரளாகக் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார், 190சோழவந்தான் சட்டமன்றத் தொகுதியில் கடந்த தேர்தலில் குறைந்த வாக்குப் பதிவான வாக்குச்சாவடியாக கண்டறியப்பட்டுள்ள மேட்டுநீரேத்தான் கிராமத்தில் உள்ள ஆரம்ப பள்ளியில் அமைந்துள்ள வாக்குச்சாவடியில் மேற்கொள்ளப்பட்டுள்ள உறுதி செய்யப்பட்ட குறைந்தபட்ச அடிப்படை வசதிகள் மற்றும் முன்னேற்பாடு மற்றும் தேர்தல் விழிப்புணர்வு பணிகள் குறித்து ஆய்வு செய்து பார்வையிட்டார்.

# “விவசாயிகள் நலனை முன்னிறுத்தும் அரசியல் கட்சிக்கு வாக்கு” பி.ஆர்.பாண்டியன் உறுதி




மேட்டுப்பாளையம், ஏப்.11-

விவசாயிகள் நலனை முன்னிறுத்தும் அரசியல் கட்சிக்கு தான் வாக்களிக்கப்படும் என தமிழக அனைத்து விவசாய சங்கங்களின் நிர்வாகிகளின் கலந்தாலோசனைக் கூட்டத்தில் இன்று (ஏப் 10) முடிவெடுக்கப்பட்டது.

கொங்கு மண்டல அளவில், தமிழக அனைத்து விவசாயிகள் சங்கங்களின் முன்னணி தலைவர்கள், விவசாயிகள் கலந்தாலோசனைக் கூட்டம் மேட்டுப்பாளையத்தில் உள்ள அரங்கில் இன்று (ஏப்.10) நடைபெற்றது.

கொங்கு மண்டல ஒருங்கிணைப்பாளர் ஏ.எஸ்.பாபு தலைமை வகித்தார். இக்கூட்டத்தில் தமிழக விவசாயிகள் சங்கத் தலைவர் கே.எம்.ராம கவுண்டர் முன்னிலை வகித்தார். சிறப்பு விருந்தினராக மாநில தலைவர் பி.ஆர். பாண்டியன் பங்கேற்று பேசினார்.

அதைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பி.ஆர்.பாண்டியன் கூறியது:

“திமுக கடந்த 2021ம் ஆண்டு தேர்தலின்போது கொடுத்த தேர்தல் அறிக்கையில் கூறிய வாக்குறுதிகள் எதனையும் நிறைவேற்றவில்லை. குறிப்பாக விவசாயிகள் உற்பத்தி செய்யும் தோட்டக்கலை பயிர்கள் பழவகைகளை கேரளாவை பின்பற்றி மாவட்டங்கள் தோறும் விலை நிர்ணயக் குழுக்கள் அமைத்து உரிய விலையில் சந்தைப்படுத்துவதற்கு உத்திரவாதம் கொடுத்தனர்.

இடுபொருட்களை வீடுகள் தோறும் விவசாயிகளுக்கு நேரடியாக மானிய விலையில் விழங்கப்படும் என்றனர். ஆனால், நிறைவேற்றவில்லை. அனைத்து மாநிலங்களிலும் கள் விற்பனை செய்ய அனுமதிக்கிற போது தமிழ்நாட்டில் அனுமதி மறுக்கின்றனர். கொங்கு மண்டலத்தில் கோவையை ஒட்டி இருக்கிற கேரளா பகுதிகளில் கள் அனுமதிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.

ஆனால், தமிழ்நாடு எல்லையில் கள் விற்பனை செய்தால் அதனை பல்வேறு வழக்குகள் போட்டு காவல் துறை மூலம் ஒடுக்க நினைக்கிறார். திமுக அரசின் துணையோடு கள் இறக்கும் விவசாயிகள் மீது துப்பாக்கி சூடு நடத்தும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இது குறித்து சிபிசிஐடி விசாரணைக்கு உத்தரவிட வேண்டும்.

கள் இறக்க அனுமதி கொடுக்க வேண்டும். வேளாண் கடன்கள் தள்ளுபடி வேண்டும். குடிமராமத்து திட்டத்தை கைவிட்டதால் ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டில் நிலத்தடி நீர் பறிபோய் விட்டது.

மேற்கு தொடர்ச்சி மலைகள் அழிக்கப்படுவதால் விலங்கினங்கள் வாழ வழியின்றி, குடியிருப்பு பகுதிகளையும் விளை நிலங்களை நோக்கி வருகிறது. பயிர்களை அழிப்பதோடு, மணிதர்களையும் கொல்கிறது. விலங்கினங்கள் விளைநிலப் பகுதிகளுக்கு வருவதை தடை செய்ய வேண்டும்.

திமுக அரசு விவசாயிகளுக்கு விரோதமான கொள்கைகளை சட்டமாக்கி திட்டங்களாக செயல்படுத்தி விளைநிலங்கள் அபகரிப்பது தொடர்கிறது. விவசாயிகளுக்கு ஆதரவான கொள்கை கொண்ட ஆட்சியாளர்களை அடையாளம் கண்டு வாக்களிப்பது என முடிவு எடுக்கப்பட்டுள்ளது” என்று அவர் கூறினார். இக்கூட்டத்தில் 300க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.



# “திமுகவின் கோட்டை சேலம் வடக்கு! 10வது கோட்டத்தில் அமைச்சர் ராஜேந்திரனின் தேர்தல் சூறாவளி!

சேலம், ஏப்.11-

சேலம் வடக்கு சட்டமன்ற தொகுதியில் திமுக சார்பில் போட்டியிடும் அமைச்சர் ராஜேந்திரன், பொன்னம்மாபேட்டை பகுதியின் 10வது கோட்டத்தில் தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார். பொதுமக்களை வீடு வீடாக நேரில் சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடினார். அப்போது, திராவிட மாடல் நல்லாட்சியின் கீழ் தமிழகத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

மேலும், மீண்டும் திமுக அரசு அமைந்தால் மேற்கொள்ளப்பட உள்ள புதிய மக்கள் நலத்திட்டங்கள், பெண்கள் நலத் திட்டங்கள், இளைஞர் முன்னேற்ற திட்டங்கள் போன்றவற்றையும் விளக்கி, உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்குமாறு பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டார். பிரச்சாரத்தில் பெண்கள் பெருமளவில் திரண்டு, ஆரத்தி எடுத்து அவரை வரவேற்றனர். பலர் தங்களது ஆதரவை வெளிப்படுத்தி, திமுக வேட்பாளருக்கு உறுதுணையாக இருப்பதாக தெரிவித்தனர். இந்த நிகழ்வில் கழக நிர்வாகிகள், தோழமை கட்சிகளின் நிர்வாகிகள், பகுதி பொறுப்பாளர்கள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு பிரச்சாரத்தை உற்சாகமாக மாற்றினர்.




# வாடிப்பட்டியில் ஆர்.பி. உதயகுமார் வேட்பாளர் மாணிக்கத்திற்கு ஆதரவாக வாக்கு சேகரிப்பு!

வாடிப்பட்டி, ஏப்.11-

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி அருகே உள்ள போடிநாயக்கன்பட்டி கிராமத்தில், சோழவந்தான் சட்டமன்றத் தொகுதி அதிமுக வேட்பாளர் மாணிக்கத்தை ஆதரித்து முன்னாள் அமைச்சர் ஆர்.பி. உதயகுமார் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அம்மா அரசின் திட்டங்கள்: “கடந்த அதிமுக ஆட்சியில் தாலிக்கு தங்கம், அரசுப் பள்ளி மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி, மிதிவண்டி மற்றும் விவசாயக் கடன் தள்ளுபடி என எண்ணற்ற திட்டங்களை வழங்கினோம். எடப்பாடியார் ஆட்சியில் பொங்கல் பரிசு ரூ. 2,500 மற்றும் தடையில்லா மின்சாரம் வழங்கப்பட்டது” எனப் பட்டியலிட்டார். “திமுக அரசு கடந்த ஐந்து ஆண்டுகளில் மக்களுக்காக எதையும் செய்யவில்லை. அதிமுக கொண்டு வந்த திட்டங்களுக்கு ஸ்டிக்கர் ஒட்டுவதே அவர்களின் வேலையாக உள்ளது. தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றாத திமுகவினரிடம் மக்கள் தைரியமாகக் கேள்வி கேட்க வேண்டும்“ எனத் தெரிவித்தார். மெகா வாக்குறுதி: “எடப்பாடியார் தலைமையிலான அதிமுக ஆட்சி அமைந்தவுடன், தமிழகத்தில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் இலவசக் குளிர்சாதனப் பெட்டி வழங்கப்படும்“ எனத் தேர்தல் அறிக்கையின் சிறப்பம்சத்தைக் கூறி இரட்டை இலைக்கு ஆதரவு திரட்டினார்.

இதில் மாநில அம்மா பேரவை துணை செயலாளர் வாடிப்பட்டி ராஜேஷ் கண்ணா, ஒன்றிய செயலாளர்கள் காளிதாஸ், கொரியர் கணேசன், கல்லணை ரவிச்சந்திரன், அரியூர் ராதாகிருஷ்ணன் நகர செயலாளர் அழகுராஜ், வி.கே.குமார், உள்பட அதிமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# தமிழகத்தில் ஏப்.14 வரை வெப்பநிலை 5 டிகிரி உயர வாய்ப்பு




சென்னை, ஏப்.11-

தமிழகத்தில் நாளை முதல் ஏப்.14ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை ஓரிரு இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயரும்.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: ஒடிசாவின் உட்பகுதி முதல் மன்னார் வளைகுடா வரை தெற்கு சத்தீஸ்கர், தெலங்கானா, ராயலசீமா, உள் தமிழகம் வழியாக சுமார் 900 மீட்டர் உயரத்தில், ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது. மேலும் வட தமிழகம் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக நாளை (ஏப்.11) மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். 12ம் தேதி தென் தமிழகம், மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

13, 14 தேதிகளில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், 15, 16 தேதிகளில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழையும் பெய்யக்கூடும். இதர தமிழக பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

நாளை முதல் 14ம் தேதி வரை உள் தமிழகத்தில் அதிகபட்ச வெப்பநிலை ஓரிரு இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 100 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 82 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக கிருஷ்ணகிரி மாவட்டம் பாரூர், தருமபுரி மாவட்டம் பாலக்கோடு, விருதுநகர் மாவட்டம் பிளவக்கல் பெரியாறு அணையில் தலா 3 செ.மீ மழை பதிவாகியுள்ளது.

# “டெல்லி, குஜராத், சேலம் என எங்கிருந்து யார் வந்தாலும் திமுக தான் வெல்லும்” -செந்தில் பாலாஜி




மேட்டுப்பாளையம், ஏப்.11-

“புதுடெல்லியில் இருந்து வந்தாலும் சரி, குஜராத்தில் இருந்து வந்தாலும் சரி, சேலத்தில் இருந்து வந்தாலும் சரி... இங்கு திமுக தான் வெல்லும்” என முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி தெரிவித்துள்ளார்.

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் உள்ள தனியார் அரங்கில், திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் மேட்டுப்பாளையம் தொகுதி செயல்வீரர்கள் கூட்டம் இன்று (ஏப்.10) நடைபெற்றது.

இக்கூட்டத்துக்கு திமுக மேற்கு மண்டல பொறுப்பாளர் வி.செந்தில் பாலாஜி தலைமை வகித்தார். மேட்டுப்பாளையம் தொகுதி திமுக வேட்பாளர் கவிதா கல்யாணசுந்தரம் மற்றும் நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் செந்தில் பாலாஜி பேசும்போது, ‘‘மேட்டுப்பாளையம் தொகுதியில் திமுக சார்பில் போட்டியிடும் கவிதா கல்யாணசுந்தரத்தை ஐம்பதாயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க வேண்டும்.

திமுகவினர் முழுவீச்சில் பணியாற்ற வேண்டும். புதுடெல்லியில் இருந்து வந்தாலும் சரி, குஜராத்தில் இருந்து வந்தாலும் சரி, சேலத்தில் இருந்து வந்தாலும் சரி இங்கு திமுக தான் வெல்லும்’’என்றார்.

அதைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம், செந்தில்பாலாஜி கூறும்போது, ‘‘மேட்டுப்பாளையம் சட்டப்பேரவைத் தொகுதியில் திமுக அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவது நிச்சயம். அதேபோல் கோவை மாவட்டத்தின் அனைத்து தொகுதிகளிலும் திமுகவே வெற்றி பெறும்“ என்றார்.

# காரைக்குடி பிரச்சாரத்தில் பேசாமல் புறப்பட்டார் விஜய்: தாமதமாக வந்ததால் அனுமதி மறுப்பு



காரைக்குடி, ஏப்.11-

காரைக்குடி தொகுதியில் அனுமதிக்கப்பட்ட நேரத்தை கடந்து, பிரச்சாரம் நடக்கும் இடத்துக்கு வந்ததால், தவெக தலைவர் விஜய் பேசுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. இதனால் காரைக்குடியில் விஜய் பேசாமல் திரும்பிச் சென்றார்.

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி தொகுதியில் இன்று விஜய் பிரச்சாரம் செய்ய திட்டமிடப்பட்டிருந்தது. இதற்காக காவல் துறை அனுமதியும் அளித்திருந்தது. காரைக்குடியில் சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த 4 வேட்பாளர்களுக்கும் ஆதரவாக விஜய் இன்று வாக்கு சேகரிப்பதாக இருந்தது. இதற்காக இன்று காலையில் சென்னையில் இருந்து தனி விமானம் மூலமாக மதுரை வந்த விஜய், அங்கிருந்து தனது வாகனம் மூலமாக காரைக்குடிக்கு புறப்பட்டார்.

மதுரையிலிருந்து வரும் வழியில் தவெகவினர் திரண்டதால், அவர்களுக்கு கையசைத்தபடி விஜய்யின் வாகனம் ஆமை வேகத்தில் பயணித்தது. இடையில் திடீரென பிரச்சார வாகனத்தில் இருந்து இறங்கிய விஜய், அவருக்கு தயாராக வைக்கப்பட்டிருந்த சைக்கிளில் ஏறி பயணிக்க தொடங்கினார். இதனால் அவர் காரைக்குடிக்கு வருவதற்கு மிகவும் தாமதமானது.

மதுரையில் இருந்து காரைக்குடி வருவதற்க்கு உள்ள 90 கிலோ மீட்டர் தூரத்தை கடக்க விஜய்யின் வாகனம் 4 மணி நேரத்தும் மேல் எடுத்துக்கொண்டது. இதனால் விஜய், காரைக்குடிக்கு மதியம் 2.30 மணிக்கு மேல்தான் வந்தார். விஜய் காரைக்குடியில் பிரச்சாரம் செய்ய நண்பகல் 12 மணி முதல் மதியம் 2.30 மணி வரை அனுமதி அளிக்கப்பட்டிருந்தது.

காவல் துறை அனுமதித்திருந்த நேரத்தை தாண்டி காரைக்குடிக்கு விஜய் வந்ததால், அவருக்கு பிரச்சாரம் மேற்கொள்ள அனுமதி மறுக்கப்பட்டது. இதனால், பிரச்சாரம் நடக்கும் இடத்தில் கூடியிருந்த தொண்டர்களிடம் பேசாமலேயே விஜய் அங்கிருந்து புறப்பட்டார். மேலும், காரைக்குடியில் ரோடு ஷோ மேற்கொண்ட விஜய், தவெக வேட்பாளர் பிரபுவுக்கு வாக்களிக்கும்படி சைகையின் மூலம் தெரிவித்துவிட்டு புறப்பட்டார்.













SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000